# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

பெருமையை எங்களுக்குத் தேடித் தந்து, நெஞ்சை நிமிர்த்திப் பேச வைத்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்களாகிய உங்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்வது, அச்சப்படாதீர்கள்! தயங்காதீர்கள்! காடு எதுவாக இருந்தாலும், சிங்கம்தான் அங்கு Single! சிங்கம் தான் அங்கு ராஜா! அதுபோன்று, எளிய பின்னணியில் இருந்து பெரிய உயரத்திற்கு முயற்சியால் வந்திருக்கக் கூடிய நீங்கள்தான் அங்கே Real Hero! உங்கள் கெத்தைக் காண்பித்து ஜெயித்து வாருங்கள். உங்களை தூக்கி வைத்துக் கொண்டாட நாங்களும், இந்த உலகமும் தயாராக இருக்கிறது!

**தொலைநோக்குப் பார்வையோடு தயாரிக்கப்பட கல்வி அறிக்கை!**

இந்த பெருமைமிகு விழாவில் தமிழ்நாட்டின் மாநிலப் பள்ளிக் கல்விக் கொள்கை 2025ஐ வெளியிட்டது பெரு மகிழ்ச்சி! தமிழ்நாட்டுக்கு என்று எல்லாவற்றிலும் ஒரு Unique Character இருக்கிறது. முற்போக்கான சிந்தனை இருக்கிறது! அதை அடிப்படையாக வைத்து, எதிர்காலத்திற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வையோடும் இந்தக் கல்விக் கொள்கையை உருவாக்கியிருக்கிறோம்! இதில் Highlightஆக சில Pointகளை சொல்ல விரும்புகிறேன்.

இந்த கல்விக் கொள்கை மூலமாக, படித்து, மனப்பாடம் செய்வதைவிட சிந்தித்து, கேள்வி கேட்கின்ற மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றலை வழங்க இருக்கிறோம்! தொழில்நுட்ப மனம் படைத்தவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! படிப்பவர்களாக மட்டுமல்ல, படைப்பாற்றல் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! கல்வியோடு உடற்பயிற்சியும் இணைக்கப்படும்! தாய்மொழி தமிழ் நம்முடைய அடையாளமாக பெருமிதமாக இருக்கும்! முக்கியமாக தமிழும் ஆங்கிலமும் என்கிற இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கையாக இருக்கும்! மீண்டும் சொல்கிறேன்.... இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கை!

**வாழ்க்கைக்கு வழிகாட்டும் 'நான் முதல்வன்' திட்டம்!**

ஒவ்வொரு ஒன்றியத்திலும், புதிய மாதிரி வெற்றிப் பள்ளிகள் அமைக்கப்படும்! உண்டு உறைவிடப் பள்ளிகள் உருவாக்கப்படும்! கல்வித் தொலைக் காட்சியும், மணற்கேணி செயலியும் 'ஒவ்வொரு வீடும் ஒரு வகுப்பறை' என்ற நிலையை உருவாக்கும்! மதிப்பெண்களாக இல்லாமல் மதிப்பீடுகளை நோக்கிய பயணமாக, தேர்வு முறை அமையும்! பசுமைப் பள்ளிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும். நான் முதல்வன் திட்டம் வேலைக்கு வழிகாட்டுவதாக மட்டுமல்லாமல், வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக அமையும்!

> இந்த கல்விக் கொள்கை மூலமாக, படித்து, மனப்பாடம் செய்வதைவிட சிந்தித்து, கேள்வி கேட்கின்ற மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றலை வழங்க இருக்கிறோம்! தொழில்நுட்ப மனம் படைத்தவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! படிப்பவர்களாக மட்டுமல்ல, படைப்பாற்றல் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! கல்வியோடு உடற்பயிற்சியும் இணைக்கப்படும்! தாய்மொழி தமிழ் நம்முடைய அடையாளமாக பெருமிதமாக இருக்கும்! முக்கியமாக தமிழும் ஆங்கிலமும் என்கிற இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கையாக இருக்கும்! மீண்டும் சொல்கிறேன்.... இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கை!

இப்படி, கல்வித் துறையில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவர இருக்கிறோம். ஒரு வரியில் சொல்ல வேண்டும் என்றால், "அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் உயர்தரக் கல்வி"! இதுதான், நம்முடைய திராவிட மாடல் அரசின் கல்விக் கொள்கை!

**அறிவுக் கல்வியை அறிமுகம் செய்வோம்!**

பள்ளிகள் எல்லோருக்குமானது! அங்கு யாருக்கும் தடை இல்லை! தடுக்கப்படவும் விடமாட்டோம்! யாரும் புறக்கணிக்கப்படக் கூடாது! கல்விப் பாகுபாட்டை நீக்குவோம்! நீங்கள் விரும்புகின்ற கல்வியைப் பெறுவதற்கான வாசலை, நம்முடைய கல்விக் கொள்கை திறந்து வைக்கும்! கல்விச் சமத்துவத்தை உருவாக்குவோம்! அறிவுக் கல்வியை அறிமுகம் செய்வோம்! முக்கியமாக அது பகுத்தறிவுக் கல்வியாக இருக்கும்! அறிவியலுக்குப் புறம்பான பிற்போக்குச் சிந்தனைகள் பள்ளிகளில் நுழைய அனுமதிக்க மாட்டோம்!

நம்முடைய மாணவர்கள் உலகளவில் போட்டி போட்டு, வெற்றி பெற இந்த மாநிலக் கல்விக் கொள்கை துணையாக இருக்கும்! மொத்தத்தில், கல்வியில் முன்னணி மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டை மேலும் முன்னேற்றுவோம்! கல்வி மூலமாக, எதிர்காலத்தில் நீங்கள் எல்லோரும் பெரிய பெரிய அதிகாரிகளாக, அரசியல் தலைவர்களாக, அறிவியலாளர்களாக, மருத்துவர்களாக, சட்ட அறிஞர்களாக, பொறியாளர்களாக, கலைஞர்களாக உருவாகி, உங்கள் வீட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும்! இதுபோன்ற இன்னொரு மேடையில், உங்களை எடுத்துக்காட்டாகச் சொல்லி, மற்றவர்களை ஊக்கப்படுத்தும் அளவுக்கு நீங்களும் உயர வேண்டும், உயர வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

கள்ளக்குறிச்சி – உளுந்தூர்பேட்டை கீழ் புத்தமங்கலம் கிராமத்தில்

# கோவில் திருவிழாவின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக 9-**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், கீழ் புத்த மங்கலம் கிராமத்தில் கோவில் திருவிழாவின்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கீழ் புத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.செந்தில்குமார் (வயது 36) த/பெ.ராஜாங்கம் என்பவர் நேற்று (06.08.2025) அதிகாலை சுமார் 12.30 மணியளவில் மேற்படி கிராமத்தில் நடைபெற்ற முத்து மாரியம்மன் கோவில் திருவிழா சாமி ஊர்வலத்தின்போது சகடையிலிருந்த குடை மின்கம்பியில் பட்டு அறுந்து கீழே விழுந்ததில் எதிர்பாராதவிதமாக கரகம் தூக்கிச் சென்ற மேற்குறிப்பிட்ட திரு.செந்தில்குமார் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

# அமைச்சர் துரைமுருகன் அறிக்கை! முதல் பக்கத் தொடர்ச்சி

அனைத்தும் கேள்வி கேட்டும் அதனை மதிக்காமல் வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையை மேற்கொண்டது தேர்தல் ஆணையம்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்கிற பெயரில் நாட்டு மக்களின் குடியுரிமையைச் சோதித்துப் பார்க்கும் நடவடிக்கையாகவே தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளது. ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட ஆதார் அடையாள அட்டையையும், தேர்தல் ஆணையமே கொடுத்த வாக்காளர் அடையாள அட்டையையுமே கூட வாக்காளர் தகுதிக்கான அடையாளமாக ஏற்றுக் கொள்ளாமல் மக்களைத் திணறடித்தது தேர்தல் ஆணையம். உச்ச நீதிமன்றம் அவற்றையும் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்திய பின்பும் அதனைப் புறக்கணித்து அராஜகம் செய்துள்ளனர்.

**ஒருதலைப்பட்ச நடவடிக்கை!**

தேர்தல் ஆணையத்தின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையினால் பீகாரில் 65 லட்சம் பேர் தங்களது வாக்குரிமையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதில் 36 இலட்சம் பேர் வேலைகளுக்காக வேறு மாநிலங்களுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலைக்காகத் தற்காலிகமாக வெளியூர் சென்றவர்களை எல்லாம் எந்தவிதக் கேள்வியுமின்றி நீக்கி உள்ளனர். அதோடு அவர்கள் வசிக்கும் மாநிலங்களின் வாக்காளர் பட்டியலில் தங்களை இணைந்து கொள்ளலாம் என மற்றொரு அதிர்ச்சிகரமான தகவலையும் தெரிவித்திருக்கிறது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையத்தின் இந்த SIR நடவடிக்கையினால் பெரியளவில் ஏழை எளிய மக்களும் , சிறுபான்மையின மக்களும், பெண்களும் தங்களது வாக்குரிமையை இழக்கும் அபாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதோடு போலி வாக்காளர்களையும் அதிகளவு சேர்த்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத நபர்கள் பல பேர் ஒரே வீட்டில் வசிப்பதாக வாக்காளர் பட்டியலில் பதிவாகி உள்ளது. SIR என்பது முறைகேட்டைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்படுகிறது என்றால் இந்த முறைகேடு எப்படி நடந்தது? முறைகேட்டைக் களைவதாகச்சொல்லிக் கொண்டு முறைகேட்டைத் தேர்தல் ஆணையம் செய்யலாமா? SIR என்ற முறையற்ற வாக்காளர் திருத்த நடவடிக்கையைத் தேர்தல் ஆணையம் உடனடியாகக் கைவிட வேண்டும்.

**தமிழ்நாட்டிலும் பாதிப்பு ஏற்படும்!**

அடுத்த ஆண்டு தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் சூழலில், தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைகள் தமிழ்நாட்டிலும் மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும். தமிழ்நாட்டு வாக்காளர்கள் தங்களது வாக்காளர் தகுதியை நிரூபிக்க வேண்டும் எனும் பெயரால் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதே போல முறையற்ற வகையில் லட்சக்கணக்கான பிற மாநில மக்களைத் தமிழ்நாட்டில் சேர்க்கும் சதி திட்டத்தையும் ஒன்றிய பாஜக அரசு மேற்கொள்ளக் கூடும் . இது தமிழ்நாட்டின் அரசியல் உரிமையையே அபகரிக்கும் செயல்.

நாட்டில் ஜனநாயகத்திற்கும் தமிழ்நாட்டு மக்களின் அரசியல் உரிமைக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் இந்த விவகாரத்தில் வாய்மூடி கள்ள மௌனம் காத்து தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப்பெரிய துரோகத்தைச் செய்து கொண்டிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. பாஜகவின் அடிமையாய் மாறி, அதிமுக வை அடமானம் வைத்தவர், தமிழ்நாட்டு வாக்காளர்களையும் டெல்லியிடம் அடமானம் வைக்கத் துணிந்துவிட்டாரா? இல்லை என்றால் SIR என்ற முறைகேடான வாக்காளர் பட்டியல் திருத்தம் பற்றி இதுவரை வாய் திறக்காதது ஏன்?

தமிழ்நாட்டில் அரசியல் ரீதியாகப் போராடி வெற்றி பெற முடியாத அடிமைகளும் அவர்கள் எஜமானர்களும் குறுக்கு வழியில் வெற்றி பெற்று விடலாம் என்று கனவு கண்டால், அது ஒரு போதும் நடக்காது. முதலமைச்சர் மு.க, ஸ்டாலின் அவர்களோடு தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் திரண்டு நின்று சதிகார கும்பலை விரட்டி அடிப்பார்கள்.

இவ்வாறு கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

திருவண்ணாமலை தெற்கு – வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் நடைபெற்றது!

*திருவண்ணாமலை, ஆக. 9 -*

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. அமைதி ஊர்வலத்தில் கழக மருத்துவ துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி ஆகியோர் பங்கேற்றனர். தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.


07.08.2025 வியாழக்கிழமை காலை சரியாக 8.00 மணிக்கு, காந்தி சிலை அருகில் இருந்து, திரு வண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு அமைதி ஊர்வலம் நடைபெற்றது. அமைதி ஊர்வலத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அவர்கள் தலைமையேற்று, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கோ. கண்ணன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊர்வல முடிவில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் 500க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

அமைதி ஊர்வலத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர் செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலிமணியன்,

மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ் குமார், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ். டி.கார்த்திகேயன், கே.ஏ. புஷ்ப ராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி. அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், அன்னை.சீனுவாசன், பி.செல்வ ராஜன், ஏ.எம். சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணி வண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், இராணி வேங்கடேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடி கள் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் தொகுதியில் ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகளை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

---

திருப்பத்தூர் தொகுதியில்

# ரூ.1 கோடியில் மேம்பாட்டுப் பணிகள்!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருப்பத்தூர், ஆக. 9 -*

திருப்பத்தூர் நகரம் 1வது வார்டு லண்டன்மிஷன் ரோடு பகுதியில் நகராட்சி நிதி வாயிலாக 40 லட்சம் மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடி கால்வாய் அமைக்கும் பணிக்கும், கந்திலி ஒன்றியம் செவ்வாத்தூர் ஊராட்சி பெரியார்நகர் பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் வாயிலாக 15 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மேம்பாட்டு பணி, தொகுதி மேம்பாட்டு திட்டம் வாயிலாக 5 லட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் தரைதளம் அமைக்கும் பணி, சு.பள்ளிப்பட்டு ஊராட்சியில் ஒன்றிய நிதி வாயிலாக 45 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டிப் பணி ஆக மொத்தம் ஒரு கோடியே 5 லட்சம் மதிப்பீட்டிலான வளர்ச்சிப் பணிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் A.நல்லதம்பி எம்.எல்.ஏ. பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் சு.ராசேந்திரன், சேர்மென் சங்கீதா வெங்கடேசன், டி.ரகுநாத், வார்டு கவுன்சிலர் குப்பம்மாள்தம்மன், ஜீவிதாபார்த்திபன், கந்திலி ஒன்றியத்தில் ஒன்றிய சேர்மென் திருமதிதிருமுருகன், வட்டார மருத்துவ அலுவலர். தீபா, ஒன்றிய செயலாளர்கள். க.முருகேசன், அ. மோகன்ராஜ், மாவட்டகவுன்சிலர்கள் கே.ஏ.குணசேகரன், சி.கே.சுப்பிரமணி, ஒன்றிய துணை சேர்மென்.ஜி.மோகன்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் சர்க்கரை, ஊராட்சி மன்ற தலைவர்கள்கே.மோகனா, சைனம்மாள் மற்றும் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. அயலக அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் **விழுப்புரம் மத்திய,** மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - **க. ஹலில் பாய்ஸ்** 171/9, மகாத்மா காந்தி ரோடு, கோட்டக்குப்பம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத்தலைவர் - கே.வி.ஆர். விஜயகுமார் 42, பூந்தோட்டம், 23வது வார்டு, விழுப்புரம்.

அமைப்பாளர் - ஒ.டி.எம். நவாஸ்கான் 33, சிவன்படை தெரு, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஒ.பி. ஓம்லக்கி (எ) லஷ்மிநாராயணன் 2, சுப்புசந்து, காமராஜர் வீதி, விழுப்புரம். 2) கே. ஜனார்த்தனன் 42, வி.மருதூர்மேடு, விழுப்புரம். 3) பி. ஜெயவேல் எடையன்சாவடி, ஆரோவில் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம். 4) க. ரஞ்சித் கோவிந்தராஜ் நகர், வளவனூர், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 5) டி. வாசுதேவன் மாரியம்மன் கோயில் தெரு, பொம்பூர், விழுப்புரம் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 06-08-2025.

**எம்.எம்.அப்துல்லா**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி.

---

## தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு **விழுப்புரம் மத்திய,** மாவட்டங்களின் தி.மு.க. மகளிர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - **சந்திரலேகா நீதிமான்** 4/259, ரோட்டுத் தெரு, பில்லூர், விழுப்புரம்.

துணைத் தலைவர் - பா. சாந்தி 23, மாரியம்மன் கோயில் தெரு, புளிச்சப்பள்ளம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம்.

அமைப்பாளர் - எ.ஜி. செல்வி அரசமங்கலம் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெ. சரஸ்வதி மாரியம்மன் கோயில் தெரு, கோட்டக்கரை கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம். 2) எம். ஆனந்தி விநாயகர் கோயில் தெரு, வெள்ளாழங்குப்பம், பாக்கம் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 3) கே. சுமதி வெங்கடேசபுரம் தெரு, கொண்டங்கி அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) ஆ. மஞ்சு, பெரும்பாக்கம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.

சமூக வலைதள பொறுப்பாளர்கள் - 1) எஸ். சுபஸ்ரீ மாரியம்மன் கோயில் தெரு, வில்லியனூர், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 2) ஒ. தவமணி பெரும்பாக்கம், வானூர் வட்டம், விழுப்புரம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 07-08-2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் **விழுப்புரம் மத்திய** மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - **எ. பிரான்சிஸ்கா மேரி,** முதல் தெரு, சேவியர் தெரு, விழுப்புரம்.

துணைத் தலைவர் - ஆர். சுசிலா யாதவர் தெரு, வாணியம்பாளையம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.

அமைப்பாளர் - கே. சாருலதா 273, மெயின் ரோடு, கரசானூர், வானூர் வட்டம், விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். ராஜேஸ்வரி பஞ்சமாதேவி, பி. வில்லியனூர் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 2) கு. லட்சுமி 10, மாரியம்மன் கோயில் தெரு, பரிக்கல்பட்டு, பெரும்பாக்கம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) பா. தீபஒளி 447-சி, தெற்கு இரயில்வே குடியிருப்பு, விழுப்புரம். 4) என். ஜீனத்பேகம் 52, இந்திரா நகர், கோட்டக்குப்பம், வானூர் வட்டம், விழுப்புரம். 5) எம். நாகவள்ளி மாரியம்மன் கோயில் தெரு, ஓட்டேரிப்பாளையம், சாலையாம்பாளையம் அஞ்சல், விழுப்புரம் வட்டம் - 605108, விழுப்புரம்.

சமூக வலைதள பொறுப்பாளர்கள் - 1) எஸ். பிரியங்கா, 1/33, காமன் கோயில் தெரு, பஞ்சமாதேவி, ப. வில்லியனூர் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 2) ஐ. சரண்யா ஆலமரத்துக்குப்பம், கோண்டூர் மற்றும் அஞ்சல், கண்டமங்கலம் ஒன்றியம், விழுப்புரம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 07-08-2025.

**நாமக்கல் ப.இராணி,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி